அன்பளிப்பு 20 p

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 02. 10. 1992

## ஐக்கிய நாடுகள் சபைக்கு..

இலங்கை இனப்பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் செல்ல கோலந்து (HOLLAND) அரசு முயற்சிகள் நடைபெறுவதாக சுவீடன் உப்சால் பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் சோக் கூறியுள்ளார். இவ்விடயம் ஐரோப்பிய சமூக நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் ஆராயப்பட்டதாகத் தெரிய வருகின்றது. யாழ்ப்பாண பிரஜைகள் குழுவும் சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் ஐ. நா. வின் மத்தியஸ்தத்திற்கு வழி செய்யும் படி வலியுறுத்தியுள்ளது. ■

# கிழக்கைப் பிடித்ததாக கூறினார்கள் 27 மாதங்களாகியும் "புலிகளே" ஆதிக்கம்

- காயங்கேணி, திருமலை, மணலாறு தாக்குதல்களில் 50 இராணுவம் பலி
- வடக்கில் 64 காவலரண்கள் அழிப்பு 30 இராணுவத்தினர் பலி

■ மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி லெப். கேர்ணல். சுபன் வீரச்சாவு

தென் தமிழீழத்திலும் வட தமிழீழத்திலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்கள் முன் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. இதனால் கிழக்கிலும் வடக்கிலும் சிறிலங்கா இராணுவம் தடுமாறுவதாக சிங்களப் பத்திரிகையாளர்களே வர்ணித்துள்ளனர். கிழக்கில் "எதிர்பாராத தாக்குதல்களை" மிகப் பலமுடன் விடுதலைப்புலிகள் வெற்றிகரமாக நடாத்துவதாகவும் மக்கள் ஆதரவு புலிகளுக்கு பெருமளவு இருப்பதாலேயே இத்தாக்குதல்களை வெற்றிகரமாக நடாத்த முடிகிறதெனவும் சிங்களப்பத்திரிகையாளர் விமர்சித்திருக்கிறார். கடந்த சில தினங்களில் தென் தமிழீழத்தில் 20 இராணுவத்தினர் பல்வேறு தாக்குதல்களில் இறந்துள்ளனர். இதற்கு முன்பு வாழைச்சேனை காயங்கேணியில் 25 இராணுவத்தினர் பலியாகினர். திருகோணமலை-பொலநறுவை வீதியில் 9 இராணுவத்தினர் உயிர் இழந்தனர். இதற்கு சில தினங்களுக்கு முன்னர் அல்லைக்குளத்தில் படகுப்பாதை தகர்க்கப்பட்டதில் 30 இராணுவத்தினர் மடிந்தனர். தென் தமிழீழத்தின் எல்லை நகரான முல்லைத்தீவு, மணலாற்றில் கொக்குத்தொடுவாய் காவலரண் தாக்கப்பட்டதில் 10 இராணுவத்தினர் அழிக்கப்பட்டனர். கிழக்கினை பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிட்டோம் என சிறிலங்கா அரசு புளுகி 27 மாதங்களாகியும் கூட சிறிலங்கா அரசால் தென்தமிழீழத்தின் சிறுபகுதியைக்கூட கட்டுப்படுத்த முடியவில்லை என்பது தெட்டத் தெளிவாகியுள்ளது.

### குடாநாட்டிற்குள் காவலரண்கள் சிதறடிப்பு

சிறிலங்கா இராணுவத்தின் மிகப் பலம்பொருந்திய ஆனையிறவு இராணுவ முகாமிற்கு சிலமைல் தூரத்திலுள்ள பூநகரி இராணுவக் காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் திடீர்த்தாக்குதலை மேற்கொண்டனர். 64 இராணுவக் காவலரண்கள் தகர்க்கப்பட்டதுடன் 30க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே செத்துமடிந்தனர். இதேவேளை இத்தாக்குதலின்போது சிறிலங்கா இராணுவத்தளபதி சிசில் வைத்யரத்னா, சிறிலங்கா வடபகுதித் தளபதி ஜெரி டி சில்வா ஆகியோர் மயிரிழையில் தப்பியுள்ளதாக இராணுவத் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

பூநகரிப் பகுதியில் ரோந்து வந்த இராணுவ அணியொன்றின் மீது பதுங்கித்தாக்குதல் நடாத்தப்பட்டதில் ஒரு இராணுவ அதிகாரி இறந்ததுடன் 7 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். ஒரு இராணுவ வாகனம் முற்றாகத் தகர்க்கப்பட்டது. 50-ற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக்கொண்ட பூநகரி இராணுவக் காவலரண்கள் மீது தமிழீழவிடுதலைப்புலிகள், அபாரத் துணிச்சலுடன் நவீன ஆயுதங்கள் சகிதம் தாக்குதலை மேற்கொள்ளத்தொடங்கியதும் நிலைகுலைந்த இராணுவத்தினர் பின்னடைந்து தலைமை இராணுவ முகாமுக்குள் சரண் புகுந்தனர்.

### தளபதி "சுபன்" வீரச்சாவு.

இந்தப் பூநகரித்தாக்குதலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்ட சிறப்புத்தளபதி சுபன் வீரச்சாவை எய்தியுள்ளார். இவருடன் கூட வேறு ஐந்து வேங்கைகள் தாயக மண்ணின் விடுதலை வித்தாக தம் இன்னுயிரை ஈந்தனர். மன்னார் மாவட்டச் சிறப்புத் தளபதி "சுபன்" களம் பல கண்ட வீர வேங்கை. இலங்கை இந்திய இராணுவங்களை எதிர்த்து வீர வரலாறு படைத்த தளபதி சுபன், முன்னர் தலைவர் பிரபாகரனின் மெய்க்காவலர் அணியில் அரும்பணியாற்றிய வீரராவார். தளபதி சுபனுக்கும் மற்றும் இந்த வீர வேங்கைகளுக்கும் வீர வணக்கங்களை மக்கள் தெரிவித்துவருகின்றனர். இதற்கு முன்பு மணலாறு கொக்குத்தொடுவாய் காவலரண் தகர்ப்பில் தம் இன்னுயிர் ஈந்த ஐந்து வீர வேங்கைகளுக்கும் தமிழ் மக்கள் சிரம் தாழ்த்தி வீரவணக்கம் செலுத்தினர்.



லெப். கேர்ணல். சுபன்

### சதுரங்க நகர்வில் இராணுவம் தோல்வி

"சதுரங்கம்" எனப் பெயரிடப்பட்டு தலைநகரிய இராணுவ நடவடிக்கையை நடாத்தமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப்புலிகளால் [illegible] ■

# தமிழகத்தில் தமிழீழ உணர்வால்

# மக்களாவேசம் ஆர்ப்பாட்டமாக வெளிப்பட்டது

- 50 வாகனங்கள் சேதம்
- 4046 பேர் கைதாகினர்



### தமிழகத்தில் புலி இயக்கத் தடைச்சட்டம் செயலிழந்தது

"எங்கள் தமிழினத்தின் தலைவர் பிரபாகரனே. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை உடன் அகற்று. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரி" எனக் கோஷமிட்டவாறு இலட்சக்கணக்கான மக்கள் சென்னை அண்ணாசாலையூடு பேரணி நடத்தினர். பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸ், பண்ருட்டி ராமச்சந்திரன், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன், திராவிடர் மன்றத் தலைவர் திரு. உட்படப் பல தன்மானத் தலைவர்களும் ஆதரவு இயக்கங்களும் சேர்ந்து இவ் ஊர்வலத்தை நடாத்தினர். முன்னாள் இந்தியப் பிரதமர் வி.பி. சிங் உட்படப் பல இந்தியத் தலைவர்களும் இதில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி [illegible] பக்கம்

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# யாருக்கு இலாபம் ?

கிழக்கைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து விட்டதாக சிறிலங்கா அரசு இரண்டு வருடங்களுக்கு முன்பே புளுகியது. ஆனால் இன்று 27.9.92ல் வெளியான 'ஐலண்ட்' பத்திரிகையில் சிங்களப் பத்திரிகையாளரான ரோகன் குணசேகராவே 'கிழக்கில் சிறிலங்கா இராணுவம் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கின்றது' என்ற தலைப்பில் சிறிலங்கா அரசால் கிழக்கை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியவில்லை எனப் பகிரங்கப்படுத்தியுள்ளார். அத்துடன் விடுதலைப்புலிகள் 'எதிர்பாரா' தாக்குதல்களை சிறிலங்கா இராணுவத்தின் மேல் வெற்றிகரமாக நடத்துகிறார்கள் எனக் கூறி தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ சமவலுத் தன்மையையும் ஏற்றுள்ளார். சிறிலங்கா இராணுவத்திற்கு பாரதூர இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதையும் ஒப்புக்கொண்டுள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகள் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு ஆகிய கிழக்கு மாவட்டங்களில், நடாத்திவரும் மிகப்பலமான 'எதிர்பாரா' தாக்குதல்கள், இப்பகுதியில் உள்ள தமிழீழ விடுதலைப் போராளிகளின் எண்ணிக்கைச் செறிவையும், மக்கள் அளிக்கும் பேராதரவையும் காட்டுகின்றது' என எழுதி மக்கள் ஆதரவு தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்ட வெற்றிகளின் அத்திவாரம் என்பதையும் உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

'சிறிது சிறிதாக பலாலி இராணுவ முகாமின் பாதுகாப்பு எல்லைக்கோட்டை, முதலில் தெல்லிப்பளை நோக்கியும் பின்னர் மாதகல் நோக்கியும் இறுதியாக யாழ்ப்பாண நகருக்கு அண்மையாக உள்ள பண்டத்தரிப்பு நோக்கியும் விஸ்தரித்துள்ளமையே சிறிலங்கா இராணுவத்தின் ஒரே சாதனை என ரோகன் குணசேகரா ஆறுதலடைந்துள்ளார். ஆனால் அவர் சிறிலங்கா இராணுவத்தினதும் சிறிலங்கா அரசினதும் புளுகைக் கேட்டு எழுதிய மை உலருமுன்னமே 'சதுரங்க' நடவடிக்கையை முறியடித்து சிறிலங்கா இராணுவத்தை, பண்டத்தரிப்பிலிருந்து மாதகல் உள் விரட்டியுள்ளனர் விடுதலைப்புலிகள். சிறிலங்கா இராணுவப் பேச்சாளரே பண்டத்தரிப்பை விட்டு இராணுவம் பின்வாங்கி விட்டதென அறிவித்துள்ளார். தீவகத்தை எடுத்தாலென்ன, மாதகல், இளவாலை, கீரிமலையை எடுத்தாலென்ன, இங்கு மக்கள் இல்லை. பொருளாதார முயற்சிகள் இல்லை. சுருக்கமாகச் சொல்லப் போனால் அங்கு வாழ்வியலே இல்லை. வெறும் தோட்டக்காணிகள்மேலும் கலட்டுப்பூமிகள்மீதும் இராணுவக் காவலரண்களில் இராணுவத்தினர் இளைப்பாறுகின்றனர். ஆனால் இந்த இளைப்பாறுதலும் நிரந்தரமானதல்ல. மக்கள் ஆதரவுடன் உள்ள புலிகள் தமது இராணுவ சமவலுத் தன்மையைப் பயன்படுத்தி திருப்பித் தாக்கும் பொழுது இராணுவத்தினர் சடலங்களாகி நிரந்தர இளைப்பாற்றியினை அடைகின்றனர். இதை எழுதிக் கொண்டிருக்கும்போது பூநகரி முதல் மட்டக்களப்பு வரை இராணுவத்தினர் பெருந்தொகையில் வீழ்த்தப்பட்டு இருப்பதையே காண்கிறோம்.

இந்நிலையில் இந்த யுத்தத்தால் யாருக்கு இலாபம்? என சிறிலங்காவின் சிங்கள மக்கள் சிந்திக்க வேண்டிய நேரம் இது. சிறிலங்கா இராணுவத்துடன் இராணுவ வலுச் சமனிலையிலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் காணப்படுகின்றது. சிறிலங்கா இராணுவத்திடம் ஆட்பலமும், ஆயுதப்பலமும் அதிகளவில் இருந்தாலும் கூட விடுதலைப்புலிகளிடம் உயிரை இலட்சியத்திற்காக கொடுக்க ஆயத்தமான மனவுறுதியும், தார்மீகமும் உள்ளவரை சிறிலங்கா இராணுவத்தினால் தமிழீழ விடுதலைப்புலிகளை அழிக்கவே முடியாது. வேண்டுமானால் சிறிலங்கா இராணுவம் தனது ஆட்பல ஆயுதபல தன்மையைக் கொண்டு இராணுவக் கிராமங்களை வெற்றுத் தரையின் மீது உருவாக்கலாம். ஆனால் இந்த இராணுவக் கிராமங்கள் கால கெதியில் புலிகளால் அழிக்கப்படும். அப்பொழுது சிறிலங்கா அரசின் பிடிவாதத்திற்கு சிங்கள மக்களான இராணுவத்தினரே பலியாவர். இதுவே நடைமுறையில் கிழக்கு தரும் படிப்பினையாகும். எனவே சிங்கள மக்கள், இவ் வீணான உயிர், உடல் அழிவுகளைத் தடுப்பதற்கு முயல வேண்டும். தாமும் தமிழரும் இரு தேசிய இனங்கள் என்பதை ஏற்று அதன் அடிப்படையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை பிரயோகித்தலுக்கு ஏற்ற தீர்வைக் காண்பதுவே அழிவுகளைக் குறைப்பதற்கு ஒரே வழி என சிறிலங்கா அரசுக்கு இடித்துரைக்க வேண்டும். இதுவே இலங்கைத் தீவின் இரு தேசிய இனங்களும் அமைதி பெறுவதற்கு ஒரே வழி ■

# குறுகிய காலத்தில் அபாரவளர்ச்சி காவல்துறை கண்டுள்ளது

**நடேசன்**

"தமிழீழ விடுதலைப் போராட்டம் உச்ச நிலை அடைந்துள்ள இன்றைய நிலையில் தமிழீழ காவல்துறை குறுகிய காலத்தில் அபாரவளர்ச்சி அடைந்துள்ளது. இவ்வளர்ச்சிக்கு காரணம் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரனின் சிறந்த வழிகாட்டலே " இவ்வாறு தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் தெரிவித்தார்.

### யாழ் குடாவில் வெற்றி

இக்குறுகிய காலத்தில் குடாநாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதில் கணிசமான வெற்றியை காவல்துறை பெற்றுள்ளது. இக்காலப் பகுதியில் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகளையும் பிணக்குகளையும் மக்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கவகையில் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்தி "பதுக்கல்" நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுத்ததன் மூலம் அத்தியாவசிய பண்டங்கள் மக்களுக்கு கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது. வீதி விபத்துக்கள் குறைக்கப்பட்டன.

### நல்வழிப்படுத்தல்

மேலும் எமது சமூகத்தில் உள்ள பல்வேறு சமூகப் பிரச்சனைகளான பெண்களுக்கெதிரான வன்முறை நடவடிக்கைகள் மற்றும் சாதிப்பாகுபாடுகளால் உருவாகும் பிரச்சனைகள் போன்ற பல்வேறு பிணக்குகளுக்கும் நியாயமான சமூகம் ஏற்றுக்கொள்ளத் தக்க தீர்வுகளை காவல்துறையினர் கண்டுள்ளனர். இதன் மூலம் மேற்படி குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களை நல்வழிப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

### மக்கள் ஒத்துழைப்பு

சிறிலங்கா அரசின் பொருளாதாரத்தடை நடவடிக்கை காரணமாக சமூகத்தில் தோன்றிய வறுமையிலும் கூட எமது மக்கள் கட்டுப்பாடான வாழ்வு முறையை கையாண்டதன் மூலமும் சட்டம் ஒழுங்கை கடைப்பிடித்ததன் மூலமும் காவல்துறையினருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளனர். எனினும் சில பகுதிகளில் உருவாகிய சமுதாயப் பிரச்சனைகளுக்கு சில பொது அமைப்புக்களுடன் காவல் துறையும் இணைந்து ஏற்ற தீர்வு காணப்பட்டது. அத்துடன் இவ்வாறான குற்றச்செயல்கள் ஏற்படாத வகையில் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

### காவல்துறை விஸ்தரிப்பு

மேற்படி பணிகளைத் தொடர்வதற்காக காவல்துறை விஸ்தரிக்கப்பட உள்ளது. யாழ் குடாநாட்டில் நாகர்கோவில், பளை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளிலும் வன்னிப்பிராந்தியத்தில் கிளிநொச்சியிலும் காவல்துறையின் புதிய பணிமனைகள் விரைவில் திறக்கப்படவுள்ளன. அதேவேளை காவல்துறைக்கு புதிதாக ஆட்களைச் சேர்த்துக் கொள்வதும், பயிற்சி வழங்குவதும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ■

# ஈழப் பிரச்சினைக்கு பிரான்ஸ், சுவீடன், அவுஸ்திரேலியாவுடன், மொரிசியஸ் பேச்சு நடத்தவுள்ளது.

ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்து பேச்சு நடத்துவதற்காக மொரிசியஸ் நாட்டு வெளியுறவு அமைச்சர் யோண் றேமன் விரைவில் அவுஸ்திரேலியா செல்லவிருக்கிறார். இவர் பிரான்ஸ், சுவீடன் ஆகிய நாடுகளுக்கும் சென்று அங்கும் தலைவர்களுடன் இவ் விடயம் குறித்து பேசவுள்ளார்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

சென்னையில் வைத்து பத்திரிகையாளர்களுடன் உரையாடிய மொரிசியஸ் நாட்டு வெளியுறவு அமைச்சர் யோண் றேமன் மேலும் கூறியதாவது : ராஜீவ் படுகொலை, அதனை அடுத்து விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடை ஆகியவை இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தடையாக இல்லை. ஆனால் அத் தீர்வுக்கான வழி முறைகளில் அவை சிக்கலை தோற்றுவித்திருக்கின்றது.

அங்கு இடம்பெறும் வன்செயல்களுக்கு இலங்கைத் தமிழர் தான் பொறுப்பு என்று கூறமுடியாது.

இன்றைய சூழ்நிலையில் இலங்கையில் தமிழர் மீதான நடவடிக்கை எமக்கு கவலை தருகின்றது. ஆனால் இப்பிரச்சினைத் தீர்வுக்கு மண்டல ரீதியிலோ வேறு வழியிலோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அதை மொரிசியஸ் வரவேற்கும்.

இது குறித்து பேசுவதற்காக நான் அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவுக்குச் செல்கின்றேன். பிரான்ஸ் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளுக்கும் சென்று அங்கும் தலைவர்களுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேசுவேன். ஆனால் இப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டு விடயமாக இருப்பதால் அதில் நேரடியாக மொரிசியஸ் தலையிட முடியாதுள்ளது ■

# மைலந்தனை இன அழிப்பு இராணுவத்தினர் அடையாளம் காணப்பட்டனர்

மைலந்தனை கிராமத்தில் புகுந்து 39 தமிழ் மக்களை படுகொலை செய்து இனஅழிப்பு செய்த இராணுவத்தினரில் 16 இராணுவத்தினரை மட்டக்களப்பில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போது மக்கள் இனங்கண்டு அடையாளம் காட்டினர்.

இதனால் அதிர்ச்சியுற்ற சிறிலங்கா அரசு இவர்கள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பெயரில் இவர்களை கொழும்புக்கு இடம் மாற்றியுள்ளதாக தெரிய வருகிறது.

### மட்டக்களப்பில் 2143 அம்பாறையில் 648

இது ஒரு புறமிருக்க மட்டக்களப்பில் இவ் வருடத்தில் 2143 பேரையும் அம்பாறையில் 648 பேரையும் திருகோணமலையில் 188 பேரையும் காணவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

### ஒத்தாச்சிமட இறப்பங்குள கொலைகள்

மட்டக்களப்பு ஒத்தாச்சிமடத்தில் [illegible]

[illegible]

[illegible]

### [illegible]

[illegible]

# தியாகி திலீபனின் 5 ஆம் ஆண்டு தமிழீழத்தில் நினைவுகூரப்பட்டது

தியாகி திலீபனின் 5 ஆம் ஆண்டு நினைவு கூரல் நிகழ்ச்சிகள் செப்டெம்பர் 15 முதல் 25 ம் திகதி வரை தமிழீழத்தில் நடைபெற்றன. பொதுப்பந்தல்கள் அமைக்கப்பட்டு மக்கள் காலை 7 மணிமுதல் மாலை 5. 00 மணிவரை அடையாள உண்ணாவிரதமிருந்தனர். பதினொருநாளும் தியாகி திலீபனின் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டன. பாடசாலைகளில் பூர்வமாக நினைவு கூரும் கூட்டங்களும் நடாத்தப்பட்டன. உண்ணாவிரதங்கள் மேற்கொள்ளப்பட்டன. இறுதிநாளான 26 ம் திகதி விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட பொதுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. ■

# சிறிலங்கா இராணுவம் பாதுகாப்பு வலயத்துள்ளும் கலிபர் தாக்குதல்



## மலையகத் தமிழ்த் தோட்டங்களில் சிங்களக் குடியேற்றங்கள்

## வாழைச்சேனைப் பகுதியில் பறங்கியர் சமூகத்தை விரட்ட முஸ்லிம்கள் தீவிர முயற்சி

## யாழ் திருக்குடும்ப கன்னியர்மட பரீட்சை மண்டபத்தில் வேட்டுக்கள்

# சிங்கள அரசின் இராணுவ....

# சிங்கள அரசின் இராணுவ வேலி சாத்தியமாகுமா?



**சிங்களப் படைக்குப் பாரிய அழிவுகளை ஏற்படுத்துவதன் மூலம், தனது ஒட்டுமொத்த இராணுவத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமலும் கைவிட முடியாமலும் திண்டாடும் ஒரு குழப்பகரமான நிலைக்குள், சிங்களப் படைத்துறைத் தலைமையைத் தள்ளியுள்ளோம்.**

யூன் 28ஆம் திகதி தொடக்கம் ஆனையிறவு -வெற்றிலைக்கேணிப் பகுதியில் சிங்களப் படைகள் நடாத்திய பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை நாம் எதிர்கொண்டிருந்தோம்.

குடா நாட்டுடனான தரைத் தொடர்பை முழுமையாகத் துண்டிக்கும் நோக்குடன், சிங்கள அரசு இந்தஇராணுவ நடவடிக்கையைச் செய்தது.

விமானப்படை - கடற்படைகளின் உதவியுடன், பல்லாயிரக்கணக்கான துருப்பினரையும் நூற்றுக்கணக்கில் கவச வாகனங்களையும் டாங்கிகளையும் உபயோகித்து, தொன் கணக்கில் வெடிமருந்துகளையும் பயன்படுத்தி, வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவுவரை, சுமார் 10 கிலோ மீற்றர் நீள இராணுவ வேலியை சிங்களப் படை அமைத்துள்ளது.

இந்த முயற்சியில் 100 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரை சிங்களப் படை இழந்ததுடன், பல கவச வாகனங்களும் சில டாங்கிகளும் நாசமாக்கப்பட்டன. அத்துடன் மக்கள் மத்தியில் பாரிய அனர்த்தங்களைப் புரிந்துவந்த 'சீனச்சகடை' என மக்களால் அழைக்கப்படும் வை-8 ரக இராட்சத விமானம் இயக்கச்சிப் பகுதியில் பீப்பாய்க்குண்டுகளை வீசிக் கொண்டிருந்த போது சுட்டுவீழ்த்தப்பட்டது. இதில் 19 விமானப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என சிங்கள அரசு ஒப்புக்கொண்டுள்ளது. கொல்லப்பட்டவர்களில் சிலர் அனுபவமும் விசேட பயிற்சியும் பெற்ற அதிகாரிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னைய எமது பத்திரிகைக் குறிப்புக்களில் குறிப்பிட்டிருந்ததைப் போல, சிங்கள அரசு தனது இராணுவ பலத்தை பயன்படுத்தி தமிழீழ நிலப்பரப்பைத் துண்டாடி, தமிழர் நிலத்தை அபகரிக்க ஆக்கிரமிக்க முயல்கின்றது. அதன் மூலம் தமிழ்த் தேசியத்தை சிதைத்து விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதுதான், சிங்கள அரசின் அரசியல் நோக்கமாகும்.

யாழ். குடாவை வன்னி நிலப்பகுதியுடன் இணைக்கும் தரைப் பாதையை மூடி, வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவுத் தளம் வரை ஒரு இராணுவ வேலியையும், வட தமிழீழத்தை தென் தமிழீழத்துடன் இணைக்கும் மணலாறு பகுதியை ஊடறுத்து ஒரு இராணுவ வேலியையும் அமைத்து தமிழர் தாயகத்தை துண்டாட சிங்கள அரசு விரும்பியுள்ளது.

இதில் முதலாவது கட்டத்தை நிறைவேற்றுவதற்கென்று ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையை எடுத்திருந்தது. அதற்கு 'பலவேகய' -2 எனப் பெயரும் இட்டிருந்தது.

இந்த இராணுவ நடவடிக்கையின் பிரதான நோக்கம் அண்டிக்குளம், கொம்படி மற்றும் ஊரியான் பாதைகளை மூடி, குடா நாட்டுடனான தரைப் போக்குவரத்தை முழுமையாக தடுப்பது தான். அதன் மூலம் புலிகளின் போக்குவரத்தை தடுத்து நிறுத்தி, புலிகளை இராணுவ ரீதியாக பலவீனமடையச் செய்ய விரும்புகின்றது.

இந்த இராணுவ இலக்கை அடைவதன் மூலம் சிங்கள அரசு ஒரு அரசியல் நோக்கை நிறைவேற்ற எத்தணிக்கின்றது.

அதாவது, குடாநாட்டை பூரண இராணுவ-பொருளாதார முற்றுகைக்குள் வைத்து, போராட்டத்தின் மையம் எனத் தான் கருதும் யாழ். குடாநாட்டின் மீது பூரண உணவு -பொருளாதார தடைகளை அமுல் செய்து குடா நாட்டை அடிபணிய வைப்பதன் மூலம், விடுதலைப் போரின் வீரியத்தைக் குறைக்கலாம் என எண்ணம் கொண்டுள்ளது. அதன் மூலம் தமிழர்களின் அரசியற் சக்தியாக இருக்கும் புலிகள் இயக்கத்தை தமிழீழ அரசியல் அரங்கில் இருந்து அப்புறப் படுத்தவும் விரும்புகின்றது.

அதேவேளை இவ்வெட்டவெளிப் பிரதேசத்தில் புலிகளை மரபுவழிப் போருக்கு இழுத்து, தன்னிடமுள்ள பிரமாண்டமான படைக்கல சக்தியான எறிகணைகள், ரவைகள், பீரங்கிக் குண்டுகள், விமானக்குண்டுகள், டாங்கியிலிருந்து வீசப்படும் குண்டுகள் ஆகியவற்றை புலிகள் மீது தாராளமாகப் பயன்படுத்தி, [illegible] இராணுவத் தலைமைப் பீடம் இந்த இராணுவ நடவடிக்கையில் எதிர்பார்த்தது.

சிங்கள அரசு செய்யவிருந்த இந்த இராணுவ நடவடிக்கையையும் அதன் இலக்குகளையும் அரசியல் நோக்கங்களையும், ஏற்கனவே நாமும் அறிந்து வைத்திருந்தோம். அத்துடன், சிங்கள அரசின் இவ் இன அழிப்புத் திட்டத்தை சில இராணுவ தந்திரோபாயங்களையும் யுக்திகளையும் உபயோகித்து எதிர்கொள்ள, நாங்களும் தீர்மானித்தோம்.

அதாவது, எதிரி விரும்புவது போல இந்த வெட்டவெளிப் பிரதேசத்தில் முழுமையான ஒரு மரபு வழிப்போரில் தொடர்ந்து ஈடுபடுவதை நாம் தவிர்க்க முயன்றோம். அதே சமயம், இராணுவ நகர்வுக்கு இடையூறும் ஏற்படுத்தும் நோக்குடன், புதுவகையான -எதிரி எதிர்பார்க்காத -தாக்குதல் தந்திரோபாயங்களை வகுத்திருந்தோம். தமிழீழத்தின் ஏனைய இடங்களில் பலவீனமான நிலையிலுள்ள இராணுவ இலக்குகளை தாக்கி அழித்து, ஏராளமான படையினரைக் கொன்று, ஆயுதங்களைக் கைப்பற்றி, சிங்களப்படைக்கு பேரிழப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் இராணுவத் தலைமைப் பீடத்தைச் சிக்கலுக்குள் மாட்டி குழப்பத்துக்குள் தத்தளிக்கவைத்து அவர்களது திட்டங்களைக் கைவிடச்செய்ய, அல்லது சீர்குலைக்க முயற்சி செய்தோம்.

யூன் 25ஆம் திகதி, யாழ் நகரப் பகுதி மீது பாரிய தாக்குதலை ஆரம்பிக்கப் போவதாக அரசு தனது தொடர்பு சாதனங்கள் மூலம் பாசாங்குசெய்து குடா நாட்டு மக்கள் மீது உளவியற் போரைத் தொடுத்துவிட்டு 28ம் திகதி, வெற்றிலைக்கேணியில் தனது இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது.

வெற்றிலைக்கேணிக் கடலில் தங்கூரமிட்டிருந்த கடற்படைக் கப்பல்களும் மற்றும் விமானங்களும் குண்டுகளை வீச, வெற்றிலைக்கேணி முகாமிலிருந்து புல்லாவெளியை நோக்கி கவச வாகனங்கள் டாங்கிகள் சகிதம் புறப்பட்ட படையினர் மீது நாம் தாக்குதல் தொடுத்தோம்.

முதல் நாள் நடந்த சண்டையில் மிகப் பெரிய உயிர்ச் சேதத்தைச் சந்தித்து, பலகவசவண்டிகளும் தகர்க்கப்பட்ட நிலையில், முன்னேறமுடியாது இராணுவம் முகாம் திரும்பியது. அன்றைய சண்டையில் எட்டுப் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

பின்னர் மூன்றாம் நாள் மீண்டும் புல்லாவெளியை நோக்கி சண்டையை நடாத்தியபடி, ஒரு பாரிய நகர்வைச் சிங்களப்படை செய்தது. அன்றைய சண்டையில் தன்னில் பலரை இழந்து இராணுவம் புல்லாவெளிச் சந்தியைச் முன்னேறியது. இம் மோதலில் எமது 4 வீரர்கள் வீரச்சாவெய்தினர்.

பின்னர் ஏழாம் நாள் - வெற்றிலைக்கேணியின் இன்னொரு முனையால் மண்டலாய் கோவிலை நோக்கிய ஒரு நகர்வைச் செய்தது. இச் சண்டை

தொடர்ச்சி 6ம் பக்கம்



**தமிழீழத்தின் ஏனைய பகுதியிலிருந்து யாழ் குடாவைத் துண்டிக்க 'இராணுவ வேலி' அமைப்பதற்காக, வெற்றிலைக்கேணி படை முகாமிலிருந்து மூன்று முனைகளால் சிங்களப்படை நகர்த்தப்பட்ட பாதை.**

**இராணுவ நடவடிக்கைகள், படைபெடுப்புகள் மூலம் புலிகளை வென்றுவிட முடியாது என்பதே, அரசியல் யதார்த்தமாகும்.**



04-08-1992 அன்று, வவுனியாவில் சிங்களப்படை மீதான தாக்குதலின் போது எம்மால் கைப்பற்றி அழிக்கப்பட்ட 'பவல்' கவச வண்டி

# தமிழீழத்தில்

## அலங்கார ஊர்தியில் 9 மாவீரர் உருவப்படங்கள்

27-08-92 அன்று காலை மாதகலில் சிறீலங்கா இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஒன்பது வீரவேங்கைகளின் உருவப்படங்களைத் தாங்கிய அஞ்சலி ஊர்தி யாழ் குடாநாடெங்கும் மக்களின் அஞ்சலிக்காகப் பவனியாகச்சென்றது. விசேடமாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துவரப்பட்ட இம் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மக்கள், தத்தமது இல்லங்களின் வாசல்களின் ஈகச் சுடர்களை ஏற்றியும், மலர்களைத் தூவியும் தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

### வலிகாமம்

வலிகாமம் பகுதியில் இவ்வூர்தியும், வெற்றிலைக்கேணி சின்னமண்டலாய், சிறிலங்கா இராணுவ காவலரண் மீதான தாக்குதலில் வீரச் சாவைத் தழுவிக் கொண்ட லெப். தொல்காப்பியன் (நீர்வேலி) புகழுடலும் கோப்பாய் கந்தசுவாமி கோயிலுக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அங்கு அஞ்சலிக் கூட்டம் இடம் பெற்றது. அஞ்சலிக் கூட்டம் நிறைவடைந்ததும் உருவப் படங்களைத் தாங்கிய ஊர்தியும், புகழுடம்பும் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாவீரனின் புகழுடம்பு புதைகுழியில் விதைக்கப்பட்டது. உருவப் படங்களுக்குரிய மாவீரர்களின் நினைவுக் கற்கள் நாட்டப்பட்டன.

## நீருந்து விசைப்படகு பற்றிய குறிப்புகள்

கடற்புலிகளால் கைப்பற்றப்பட்ட நீருந்து விசைப்படகு பற்றிய சில குறிப்புகள்.

| | |
|---|---|
| படகின் நீளம் | 13. 5 மீற்றர் |
| படகின் குத்துயரம் | 1. 0 மீற்றர் |
| படகின் அகலம் | 3. 0 மீற்றர் |
| கபின் உயரம் | 2. 25 மீற்றர் |
| கபின் அகலம் | 160 செ. மீற்றர் |
| படகின் வேகம் | 40 கடல்மைல் |

இப்படகில் 250 குதிரை வலுவுடைய இரண்டு இயந்திரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவை அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்டவையாகும். இப்படகு ஒரு அடி ஆழத்திலும் மிதக்கக் கூடியதாகும். ■




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## நீதியை நிலை நாட்ட போரிடும் புலிகளே இறுதியில் வெல்வர்

நூல் வெளியீட்டு விழாவில் பிரதம குரு உரை

நீதியை இம்மண்ணில் நிலை நாட்ட நீதியின் பக்கம் நின்று விடுதலைப் புலிகள் தர்மயுத்தம் ஒன்றை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த யுத்தத்தில் விடுதலைப் புலிகளே வெற்றியையும் அடைவார்கள்".

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் சிறீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நடைபெற்ற அருட் கவி திரு. வினாசித்தம்பிப் புலவரின் 'கீதோபதேசம்' நூல் வெளியீட்டின்போது நூலை வெளியிட்டுப் பேசிய தேவஸ்தான பிரதம குரு கலாநிதி வீர சைவ சிவத்திரு கி. உருத்திரபுரேஸ்வரக் குருக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, தர்மம் அழிந்து அதர்மம் மேலெழுகிறபோது என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன் என்பது கீதையில்

# போரும்



வீரமும் காதலும்
தமிழர் வாழ்வியல்
சங்கத்து வாழ்க்கை !
புலி கிடந்த குகையிது
என்றாள் தமிழ்த்தாய்
தன் உதரத்தையே !
தமிழீழம் தமிழர்
வாழ்வியலின் சான்று !
போரும் வாழ்வும்
அங்கே ஒன்றே !
தமிழீழம் வென்றிட
உயிரினை தருதலும்
இறவா வாழ்வே !



கிருஸ்ணப...
காகும்.
குறைந்த ...
களின் ப...
கான யு...
கண்ணன்.

இன்று எ...
ரான கூவி...
கொண்டி...
கெதிராகக்...
களின் ப...

போராளிக...
பெற்றுக்கா...
ஜெயந்தி
கோவில் ...

## காவ...
## நன்...

நல்லூர்க...
கால ஓ...

ரமாத்மாவின் வாக்
பாண்டவர்களாகிய
எண்ணிக்கையானவர்
கம் நின்று தர்மத்திற்
தத்தை நடாத்தியவர்

து மண்ணில் அந்நிய
ப்படையினர் நடாத்திக்
க்கும் அதர்ம போருக்
கண்ணன் போராளி
க்கம் நின்று எமது

இணைந்து பணியாற்றிய அமைப்புகளுக்கு நன்றி தெரிவித்து தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், தமிழீழ போராட்ட சூழ்நிலையில் யாழ். குடாநாட்டில் யுத்த மேகங்கள் சூழ்ந்திருக்கும் இவ்வேளையில் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தனின் மகோற்சவ விழா சீரும் சிறப்புடன் இனிதே நடைபெற்றுள்ளது.





நல்லூக் கந்தன் ஆலய மகோற்சவ காலத்தில் முதன் முதலாக தமிழீழ காவல்துறையின் உற்சவ கால பணிமனை ஒன்றை

# வாழ்வும்........

அமைதது லட்சோப லட்சம் அடியார்கள், பக்தர்கள் அனைவருக்கும் பணி செய்யும் அரிய வாய்ப்பினைப் பெற்றோம்.

உற்சவ காலத்தின்போது தமிழீழ காவல்துறையுடன் இணைந்து அடியார்கள், அன்பர்கள், அனைவரின் நலன்கள், பாதுகாப்பு, வீதிஒழுங்குகள் என்பவற்றின் இரவுபகலாக பணிபுரிந்த சென்ஜோன்ஸ் படைச் சாரணர்கள், யாழ். மாநகர சபை ஊழியர்கள் மற்றும் ஏனைய தொண்டர் ஸ்தாபனங்கள் அனைவருக்கும் தமிழீழ காவல்துறையின் சார்பில் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம் என அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்தார்.

ளுக்கு வெற்றிவாகை
வே இந்த கிருஸ்ண
தினத்தில் அவர்
கொண்டிருக்கும் பகு

## ல்துறையினர்
## றி தெரிவிப்பு

தன் ஆலய உற்சவ
ழங்குகளில் தம்முடன்

## செஞ்சோலை இசை மாலை கோண்டாவிலில் சாதனை

செஞ்சோலை சிறுவர் இல்ல வளர்ச்சி நிதிக்காக யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் இசை மாலை நிகழ்ச்சி நடாத்தப்பட்டு வருகின்றது. கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இசை மாலை நிகழ்ச்சிக்கு கோண்டாவில் பகுதி மக்களிடமிருந்து ரூபா இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட தொகை அன்பளிப்பாக பெறப்பட்டுள்ளது. மற்றைய எந்தப் பகுதியிலும் இப்படியான பெருந்தொகை எந்த நிகழ்ச்சியிலும் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கோண்டாவில் வாழ் மக்களின் முன்மாதிரியான இந்தச் செயலைப் பின்பற்றி ஏனைய தமிழீழமக்களும் செஞ்சோலை வளர்ச்சி நிதிக்கு ஆதரவு வழங்க வேண்டுமென விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத் துணைப்பொறுப்பாளர் தேவர் அண்ணா அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




தென் ஆசியாவின் வரலாற்றுப் போக்கை மாற்றியதில் மணலாற்று மண்ணுக்கு தனியிடமுண்டு. இந்தியப் படையுடன் இங்கு நடந்த போர்கள் பாரம்பரிய யுத்தங்களையெல்லாம் கேள்விக்குரியதாக்கிற்று. இந்திய இராணுவத்தில் சிறப்புமிக்கதாகக் கருதப்பட்ட படைப்பிரிவுகளெல்லாம் தமது பெருமையை இழந்தன. இங்கு நடந்த வியப்பூட்டும் அனுபவங்களை இந்திய இராணுவத் தளபதிகள் நூல் வடிவில் வெளியிடுகின்றனர். மற்றும் பல வரலாற்று ஆய்வாளர்கள் இதனை ஆய்வு செய்து கொண்டிருக்கின்றனர். 'அமைதிப் படையில் கடமையாற்றி உயிரிழந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும்' என்று இந்திய அரசு உத்தரவிடும் அளவுக்கு இந்தியப் படையின் இழப்பு இருந்தது.

இந்தப் பெருமை மிக்க போரில் கலந்து கொண்ட ஒரு அணியை வழி நடத்தியவன்தான் வீமன். இவன் மன்னார் மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்டவன். அங்கேயே பயிற்சியும் பெற்றவன். சொல்லப்படும் விடயத்தை இலகுவாக புரிந்து கொள்பவன். யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா இராணுவத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட குரும்பசிட்டி மினிமுகாம் தாக்குதல் உட்பட பல தாக்குதலில் கலந்த கொண்டவன். யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினருடனான போர்களில் பங்குபற்றிய பின் மணலாற்றில் இவனது பணி தொடர்ந்தது.

1988 ஆம் ஆண்டு மே மாதம் 23ம் நாள் மணலாற்றில் இந்தியப் படையினருடனான போர் ஆரம்பித்தது. காலை 5.15க்கு ஆரம்பித்த இந்தச் சண்டையில் பிற்பகல் 4-00 மணிவரை இந்தச் சண்டையில் கலந்த கொண்ட எவருமே அந்த இடத்தை விட்டு விலகவேயில்லை. வேறொரு முகாமிலிருந்த வீமன் சண்டை தொடங்கிய பத்து நிமிடத்துக்குள் ஜி.3 துப்பாக்கியுடன் அங்கு நின்றான். அவனைப் பொறுத்தவரை சண்டை செய்வதற்கு இது நல்ல சந்தர்ப்பம். அதனால் அவன் மகிழ்ச்சியுடன் கத்திக்கத்திச் சண்டை போட்டான். அன்றிலிருந்து இந்தியப்படை இந்த மண்ணை விட்டுப் போகும் வரை அவனது இந்தச் சுபாவம் மாறவில்லை.

அந்த இடைக்காலத்தில் மணலாற்று மண்ணில் நடந்த அனுபவங்கள் மறக்கமுடியாதவை. ஒரு காலத்தில் உப்புக்குக் கூட தட்டுப்பாடு இருந்தது. காயப்படுவோருக்கு வைத்தியம் செய்வதற்குரிய சூழ்நிலை இல்லை. ஒவ்வொரு போராளியும் தமது நெருங்கிய நண்பர்களை இழந்திருந்தனர். ஆனாலும் எந்த ஒரு இக்கட்டான சூழ்நிலையானாலும் இவனது கலகலப்பான போக்கை மாற்றமுடியவில்லை.

எந்த நேரமும் இந்தியப் படை வரலாம் என்பதால் உணவைச் சேமிப்பதில் வெகு அவதானமாக இருக்கவேண்டியிருந்தது. அவற்றை உருமறைப்புச் செய்வதில் மரங்கள்கூட பெரும் பங்கு வகித்தன. (இந்தியாவின் சுதந்திர தினத்தையொட்டி இந்திய வானொலியில் ஒலிபரப்பப்பட்ட கவியரங்கு ஒன்றில் வன்னிக் காட்டு மரங்கள் கூட காட்டிக்கொடுக்காது என்று குறிப்பிடுமளவிற்கு எமது மண் உயர்ந்து நின்றது. ஒரு நாள் இவன் மரத்தில் சிறாம்பிகட்டி உணவைச் சேமிக்கும்போது கையை விட்டுவிட்டு நிற்கிறேன் பார் என்று தனது நண்பனிடம் கூறியபோது மரத்திலிருந்த தவறிவிழுந்தான். அதனால் படுக்கையிலேயே கிடக்கவேண்டிய நிலை. முற்றுகையென்றால் இவனையும் படுக்கையுடன் கொண்டுபோக வேண்டும். அந்த நிலையிலும் இவனது கலகலப்பு மாறவில்லை. அதுதான் அவனது தனித்துவம்.

குணமடைந்து மீண்டும் களத்துக்கு திரும்பினான். இளைய தலைமுறைப் போராளிகளை வழிநடத்தினான். திட்டமிட்டு செயலாற்றுவதில் இவனுக்கு எவ்வளவு திறமையிருந்ததோ அதேயளவுக்கு ஒரு போராளியின் மனதை அறிந்து செயற்படும் ஆற்றலுமிருந்தது. போராளிகளின் இன்ப துன்பத்தில் பங்கு கொள்வான் மீண்டும் அவர்களைத் தட்டிக்கொடுத்து புதுத்தெம்புடன் அவர்களை போராட வைப்பான். பொதுவாக இவனது முகாம் எப்போதும் மகிழ்ச்சியுடன் காணப்படும். இந்திய ஜவான்களெல்லாம் மரண பயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கையில் இவனது முகாமில் அடிக்கடி கலை நிகழ்ச்சிகள் நடக்கும். சனி, ஞாயிறு தினங்களில் விளையாட்டுக்கள் நடைபெறும். அந்த முகாமில் ஒரு மரை, ஒரு கரடி என்பவற்றுடன் ஒரு கருங்குரங்கையும் வளர்த்தான். அது ஒரு அபூர்வ ஆற்றல் மிக்கது. இவனைப் போலவே அது எல்லோரும் எப்போதும் சந்தோசமாகவும் ஒற்றுமையாகவும் இருக்க வேண்டுமென்று விரும்பியது. யாருக்காவது ஒருவர் அடித்தால் அடிப்பவரை அது கையைப்பிடித்துத் தடுக்கும். இருவரும் ஒற்றுமையாக இருப்பதைக் கண்டாலே அதற்குத் திருப்தியேற்படும். புதிதாக அந்த முகாமுக்கு வருபவர்கள் இதனைப் பார்த்து வியப்பார்கள்.

காட்டிற்குள் சென்றபுதிதில் திசையறிகருவி மூலம் காட்டை இனங்காண்பதில் வல்லவர்களாக இருந்தவர்களில் இவனும் ஒருவன். மரணத்தின் வாசலைச் சந்தித்தது போன்ற மிகப் பயங்கரமான முற்றுகைக்குள் எதிரிப்படையை மிகக்கிட்டிய தூரத்தில் இனங்கண்ட சம்பவங்களெல்லாம் ஏராளம். அப்போதெல்லாம் திசையறிகருவியின் துணையுடன் போராளிகளை பத்திரமான இடங்களுக்குக் கொண்டு சென்றிருக்கிறான்.

சிறிலங்காப் படையினருடனான போர் மீண்டும் ஆரம்பித்த பின் இவன் மாங்குளம் முகாம் மீதான முற்றுகை, காரைநகர் சிறிலங்காப் படையினருடனான மோதல், முந்திரிகைக்குளத்தில் சிறிலங்காப் படையினரின் மினி முகாம் மீதான தாக்குதல் போன்ற பல தாக்குதல்களில் பங்கேற்றான். அக் காலங்களில் இவனுடன் தாக்குதல்களில் கலந்து கொண்டோர் அதனை ஒரு இனிய நினைவுகளாகவே குறிப்பிடுகின்றனர். ஒவ்வொரு சம்பவத்திலும் இவன் நடந்து கொண்ட விதம் தாங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்காக இவன் என்னென்ன விதத்தில் செயற்பட்டான் என்றெல்லாம் கதை கதையாகக் கூறுகின்றனர். நீந்தத் தெரியாதோரை கயிற்றில் கட்டி நீந்த விட்டது.... தமக்கு நண்டு கட்டுக் கொடுத்தது.... இளநீர் பறித்துக் கொடுத்தது.... பொதுவாக போர்ச் சூழலில் இருக்கும் உணர்வே இருக்கவில்லை அவர்களுக்கு அக் காலங்களில் ஒரு விடுமுறையைக் கழிக்கும் உணர்வே இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். போர்க்களத்தில் எதிரியை காட்டி விட்டு கட்டு விழ்த்தியதை நினைத்து வியக்கின்றனர்.

இவ்வளவு ஆற்றல் மிக்க போராளியை 15.7.1991 இல் தொடங்கிய மணலாற்றுப் போரில் இழந்தோம். இப்போருக்கு முன்னதாக இராணுவத்தினரின் உளவுப் பிரிவொன்றுடன் மோதல் நிகழ்ந்தது. எனவே நடைபெறவிருக்கும் முற்றுகையை முறியடிக்க திட்டங்கள் தீட்டினான் இவன். 'எங்கட காட்டுக்கை வந்திட்டுப் போறதெண்டா, சேட்டையா?... நல்ல அடி குடுத்துக்கலைக்க வேணும்' என்று கூறி விட்டு போராளிகளை தயார் படுத்தினான். மிகக் கடுமையான மோதல் நிகழ்ந்தது. தொடர்ச்சியான இந்த முற்றுகையில் ஒரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு செல்லும் வழியில் மறைந்திருந்த படையினர் தாக்கினர். அந்தப்போரின் போதே வீமன் இந்த மண்ணைப் பிரிந்தான். உயிர் பிரியும்வரை அந்த மோதலுக்குத் தலைமை தாங்கினான். இவனுடன் இன்னும் 12 போராளிகள் அச்சம்பவத்தில் வீரச் சாவடைந்தனர். இவனால் வழிநடத்தப்பட்ட போராளிகள் அந்தப் பாரிய முற்றுகையை முறியடித்தனர்.



-மேஜர் வீமன்-

இவனது உடல் இறுதி ஊர்வலத்துக்கு வந்தபோது மில்லரின் நினைவு தினக் கூட்டத்தில் இவன் ஆற்றிய உரையே மக்களுக்கு நினைவுக்கு வந்தது. எங்கள் தாயகபூமியில் சிங்களக் குடியேற்றத்தை முறியடிக்க அணிதிரள வேண்டுமென்று உணர்வு பூர்வமாக ஆற்றிய உரை அது. போராளிகள் இவனது கலகலப்பு, திட்டமிடும் ஆற்றல் போன்றவற்றை நினைத்து புத்துணர்வு பெறுகின்றனர். அவர்களுக்கு இவன் கடைசியாகச் சொன்னது இன்று சொன்னது போல் இருக்கிறது.

'எங்கட காட்டுக்கை வந்திட்டுப் போறதெண்டா சேட்டையா.... நல்ல அடி குடுத்துக் கலைக்க வேணும்' ஆம் இந்தக் காடுகள், கடல்கள், வயல்கள் எல்லாமே எங்களுடையவை. இதை இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள் அவர்கள் ■

-இலக்கியன்-

## தமிழகத்தில்.....

[illegible] இல் ஊர்வலத்தின் எழுச்சியைக்கண்டு வெருண்ட ஜெயலலிதா அரசாங்கம் இந்தமிழ்த் தலைவர்களை கைது செய்தது. இதனால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பால் 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதமாக்கப்பட்டதுடன் பல கட்டிடங்களும் கல் வீச்சுக்கு இலக்காகின. விசேட பொலிஸ் ரிசேவ் படையினரால் [illegible] மேற்பட்ட மக்கள் சிறைக்குள் தள்ளப்பட்டனர்.

## ஆதரவுச் சின்னம் அணிகின்றனர்

[illegible]

## தமிழர் தலைவர் பிரபாகரனே

"தமிழினத்தின் தலைவர் யார்" என்ற கேள்விக்கு டாக்டர் [illegible] [illegible] ■

## சிங்கள அரசின்...

[illegible]

# நாளை நமதே

அவள் இன்னமும் அழுது கொண்டு தானிருக்கின்றாள். எல்லோரும் ஏதோ ஒரு முடிவை வைத்து நீரினில் மூழ்கி நினைப்பொழிந்த நிலைக்கு வந்த பின்னும் அவள் அழுவதை நிறுத்தவில்லை இப்படி அவள் விழிகள் சதாகாலமும் அழுவதற்கென்றுதான் படைக்கப்பட்டதோ? ஒருகணம் தன்னை.... தான் பிறந்த வீட்டை தன் சுற்றம் சகோதரர் தாய் தந்தை எல்லோரையுமே நினைப்பாள்.

மறுகணம்.... தனக்கேற்பட்ட நிர்க்கதியை தன் குழந்தைகளை எண்ணி எண்ணி அழுவாள். தனிமை அவளை ஆட்கொள்ளும் போதிலெல்லாம் இப்படித் தான் அழுது துடிப்பாள். ஆற்றாத் துயரில் வீழ்ந்து வேகுவாள். யாராவது உறவினர்கள் பார்த்து விட்டால் போதும், அக்கணமே எல்லாவற்றையும் மறந்து சம்பிரதாயமாக அவர்களோடு பேசிக் கொள்வாள்.

"ராணி நடந்ததையே நெடுக நினைத்துக் கொண்டிருந்தால் இனி நடக்கப்போவதை யார் கவனிக்கப்போகிறார்கள். நீ இப்படியே அழுது கொண்டிருந்தால் உன்ரை குஞ்சுகளை என்ன செய்வது ஏதோ... தமிழனின் தலையெழுத்திற்கு நாமென்ன விதிவிலக்காக இருந்து விடவாமுடியும்? கண்களை மூடிக் கொண்டு காரியத்தைப் பார்க்க வேண்டியது தானே" என்று மாமி மரகதத்தின் குரல் தினம் தினம் ராணியின் மனதில் எதிரொலித்துக் கொள்ளும் போது... ஏதோ வானில் ஓடும் பாவை போல இயங்குவாள். எல்லாரும் படுக்கையில் புரளும் போது ராணி மட்டும் தனிமையில் தன் கல்யாணப் படத்தின் முன் இருந்து அழுது தீர்ப்பாள். இது கடந்த இரண்டு வருடமாக அவளின் தினக் குறிப்பாக நடந்துவரும் ஒரு நிகழ்வு.

ராணிக்கு மட்டுமா இந்த இழி நிலை...?

தமிழீழ தேசமெங்கும் சிங்கள இனவாதத்திற்கெதிரான போராட்டம் நடந்து கொண்டே இருந்தது. அரச இயந்திரத்தை செலுத்தும் ஆட்சியாளரால் இப்போரை அடக்கிவிட முடியாது தவித்துக் கொண்டிருந்தனர்.

தமிழீழத்தின் ஒரு பகுதி இராணுவ முகாம்கள் விடுதலைப் போராளிகளால் தகர்க்கப்பட்டு வெற்றி கொள்ளப்பட்ட நிலையில்.... தப்பி ஓடிய சிப்பாய்களின் சிங்களச் சீற்றம் தென் தமிழீழத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டது. வனவேட்டைக்காரரும் வனவிலங்குகளும் போலத் தென் தமிழீழம் இனவாதப் படைகளால் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

## சிறுகதை

நாளொரு கிராமம் செக்கிங் என்ற போர்வையில் கொள்ளையும் வன்முறையும் இன ஒழிப்புமாக நடை பெற்றுக்கொண்டே இருந்தது.

இந்த இன வேட்டைக்கு அகதிமுகாம்களுங்கூடத் தப்ப முடியவில்லை.

அண்மைக்கால வரலாறாக இது நடந்து கொண்டிருந்த வேளையில் தான் இதுவும் நடந்து முடிந்தது.

அந்தக் கொலனியிலும் செக்கிங் நடக்கப்போகும் செய்தி பரவலாக அடிபட்டுக் கொண்டிருந்தது.

"ராணி நாளைக்கு இஞ்சை நாளம் செக்கிங்" என்றாள் பக்கத்து வீட்டுப் பர்வதம்.

"நேற்று இளமருதங்குளத்திலை செக் பண்ணப் போனவங்கள் நல்லமுத்தன்ரை மனுசியை மனுசி அறிவில்லாமல் கிடக்குதாம்" என்றாள் ஞானம்மா.

"ஏனடியம்மா இன்றைக்கு மருந்து குடிச்சுச் செத்தபெட்டை ஏன் செத்தது... இவனுவ யாரைத்தான் விட்டாங்க..." என்றாள் பர்வதம்.

"கடைசீலை உவரை கொழுத்திப் போட்டு பொடியளையெல்லாம் பிடிச்சுக் கொண்டு போட்டாங்களாம் நாசமாய்ப் போனவங்கள்... உவங்கள் நல்லா இருப்பாங்களோ?" வயிறெரிந்த வேக் காட்டுவார்த்தைகள் இவை.

இந்தக் கொடுமையின் கொடுமுடிகளைக் கேட்கக் கேட்க இராணியின் தலை சுற்றியது. அர்த்தமற்ற தெனச்சொல்ல முடியாத கற்பனைகளெல்லாம் மனத்தீச் சுவாலையாகக் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. மூளாத்தீயாக அவளுள்ளத்தில் கனன்று கொண்டிருந்த சுவாலையின் தாக்கம் அவளுடலையும் உள்ளத்தையும் வெறுவாகத் தாக்கிவிட்டதை அவள் முகம் துலாம்பரப்படுத்தியது.

மனித உடல் கூட ஒரு உலகம் தான். அந்த உலகத்தில் முகிழ்த்தெழும் போராட்டங்களும் கிளர்ச்சிகளும், தீவிரமான மாற்றங்கள் அனைத்துமே முதலில் மனித உடலுக்குள் தானே நடைபெறுகிறது. உடலும் உள்ளமும் தீர்மானித்துப் பிரசவித்த சிந்தனைக் குழந்தை தானே உலகில் தன் மாற்றத்தைக் காட்டத்தொடங்கி விடுகிறது.

இந்த மாற்றங்களின் வெளிப்பாடுகளைத் தானே வெளி உலகப் போராட்டமாகக் காண்கின்றோம்.

ராணியின் மனதில் டானியல் தோன்றிச் சிரித்தான். அந்தச் சிரிப்பு... அர்த்தங்களை புரிந்து கொள்ள முடியாத ஒரு விதமாகத் தோன்றியது.

அந்தக் கொலனியில் நடைபெற்ற பெண்கள் சித்திரவதை இங்கு மட்டும் நடக்காதா என்ன? அதுவும் தனக்கே அப்படி நடந்து விட்டால்....

விதைப்புக் காலமாகையால் டானியல் அடுத்தடுத்த கொலனிகளுக்கு தொழில் கருதி தன் டிராக்டரோடு சென்றிருந்தான் உழவு காலங்களில் இப்படிச் சென்று உழவு முடியும் போது திரும்புவது டானியலின் வழக்கமாகும். இம்முறையும் டானியல் உழவிற்காகச் சென்று ஒரு வாரம் தான் ஆகி இருந்தது.



டானியல் வருவதற்கு நாட்கள் பல ஆகும்.

நாளைக்கு செக்கிங் நடக்கப் போகுது...

ராணியின் மனதில் அச்சம் கூடுகட்டிக்கொண்டு விட்டது.

யார் மூலமோ செய்தி அனுப்பினாள். இங்கே என்னால் தனியே இருக்க முடியாது. விடிவதற்கு முன் வந்து சேருங்கள்.

ராணியின் செய்தியோடு டானியல் புறப்பட்டு விட்டான். இப்படி ஒரு காலமும் செய்தி அனுப்பாத ராணி இன்று இப்படி....? டானியலின் மனதிலும் ஏதேதோ என்ன அலைகள் எழுந்து கொள்ளத்தான் செய்தன. இந்த நாசமறுப்பான்களின்ரை சேட்டையளை யாரோ சொல்லி மனுசியைப் பயப்படுத்தி போட்டுதுகள். பாவம் கொலனி வாழ்க்கையே ஒருவிதம் அதிலும் தனிமை. என்ன ஓட்டங்களோடு வீடு வந்து சேர்ந்து விட்டான் டானியல்.

ஏக்கமே மூச்சாக விழித்திருந்த ராணிக்கு அவனைக் கண்டதும் புத்துணர்ச்சி ஒன்று தானாக அரும்பிக் கொழுவேறியது. இனிவிடிந்தாலும் பரவாயில்லை என அவள் எண்ணியவாறு படுக்கையில் சாய்ந்தாள்.

* * *

விடிந்தும் விடியாத அதிகாலைப் பொழுது ராணி எழுந்து தேநீர் தயாரிக்கச் சென்று கொண்டாள். வீரிட்டுக் கதறிய சின்னப் பையனைத் தூக்கித் தோளில் போட்டவாறு வீட்டிற்குள்ளேயே உலவினான் டானியல்.

அந்நேரத்தில் தான் தொப் தொப்.. என்ற சப்பாத்து ஒலியோடு பத்துப் பதினைந்து இராணுவ வெறியர்கள் புகுந்தனர் எல்லாப் பக்கங்களையும் வந்தவர்களே நிரப்பிக் கொள்ள வேறு இரு இராணுவச் சிப்பாய்கள் வீட்டிற்குள் நுழைந்தனர்.

"டேய்.. நீ கொட்டியாவா? இப்படி ஒருவன் கேட்க, மற்றவன் "அ அ பிள்ளையைக் குடுத்திட்டு வா" என்றான்.

சத்தங்கேட்டு ஓடிவந்த ராணியிடம் பிள்ளையைக் குடுத்திட்டு அவர்களின் பின்னே சென்றான் டானியல். ராணி வாய்விட்டுக் கதறினாள். பின்னே ஓடினாள். "ஐயா ஐயா..." அலறி அலறி அவள் தன் கணவனின் கையைப்பற்றி இழுத்தாள்.

பாய்ந்து வந்த சிப்பாய் ஒருவன் ராணியை தள்ளிவிட்டு டானியலை முன்னே தள்ளிச் சென்றான்.

வீழ்ந்து கிடந்த ராணி தலையைத் தரையில் அடித்து அடித்துப் புலம்பினாள்.

அழுகுரல் மனிதர்களைத் தானே இரங்க வைக்கும்—ஆனால் மனித வடிவத்தில் இருக்கும் வேறான உருவங்களை என்ன செய்யும்.

டானியல் போனவன் போனது தான்.

நாட்கள் வாரங்களாயின. டானியல் திரும்பவே இல்லை.

"முகம் கருகிய நிலையில் இருபது சடலங்கள் காட்டினுள்"

"தலைகளற்ற மனித உடல்கள் சில எரிக்கப்பட்டிருந்தன"

பத்திரிகைகளிலும் வாய்ச் சொல்லாகவும் செய்திகள் பிரபலித்தன.

ராணியின் புன்னகையைப் பறித்து விட்டுக் கண்ணீரைக் கொடுத்த கயவர்கள் வேறு எங்கோ தம் நாடகத்தை நடாத்தப் போய் விட்டனர். ஆனால் ராணி... பாவம் தலை விரி கோலமாய் அவளால் என்ன செய்யமுடியும்.

"அம்மா... அப்பாவை பிடிச்ச ஆமி வைச்சிருந்த மாதிரி எனக்கும் துவக்கு வாங்கித்தாறியோ?"

"அப்பாவை பிடிச்சவனை நான் பிடிச்சு வாறனம்மா எனக்குந் துவக்கு வாங்கித்தா..."

**வளவை வளவன்**

இராணியின் மூத்த பிள்ளைகள் இப்படித்தான். கேட்டுக்கேட்டு இப்போது அவர்கள் உணர்வுகளுக்கு உணர் கொடுக்கத் தெரிந்தவர்களாக வளர்ந்து நின்றனர்.

காலம் விரைவாக ஓடியது. திலீபனைக் காணவில்லை. திலீபன் ஏ.. என் திலீபன். ராணி தேடிக்களைத்த நிலையில் படுக்கையில் சாய்ந்தாள்.

மரத்துப் போன அவள் உணர்வுகளோடு புகை படிந்த ஓவியமாகக் கிடந்தாள்.

திலீபன் சேர வேண்டிய இடத்தைச் சேர்ந்து விட்டான்.

அம்மா மாதம் ஒன்று சென்ற பின் திலீபன் வந்தான். அப்படியே வாரி அணைத்தாள் ராணி.

ஒரு கணம் தான் தாயின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே திலீபன் "அம்மா அப்பாவை எந்த வெறி நாய்கள் வேட்டையாடியதோ அந்த வெறி நாய்களால் எத்தனை அப்பாக்களை எத்தனையெத்தனை அம்மாக்களை, சின்னஞ் சிறுசுகளை இழந்து விட்டது தமிழினம். இனியும் விட்டாலும் நாளை நம் கனவு பலிக்கத்தான் போகிறது பாருங்களேன்" என்று தன் உணர்வுகளைக் கொட்டித் தீர்த்தான்.

ராணியின் முகத்தில் துன்பத்திலும் ஒரு இன்பம் இழையோட நின்றது. மகனை அவள் அணைத்துக் கொண்டாள். ■

## எங்கள் கிராம மர நிழலில் எதிரிகள் இளைப்பாற அனுமதியோம்

**பைந்தமிழன்**

சிங்களத்தின் கூலிகள் எங்களின் மேல் ஏறி நின்று எக்காளமிடுகின்றது. நாங்கள் ஓடி ஆடி விளையாடித் திரிந்த கிராமத்தின் மரநிழல்கள் அவனுக்கு இளைப்பாறும் இடமாகப் போக நாங்கள் அனுமதிக்க முடியாது.

இவ்வாறு ஓராம் கட்டை மொடேன் கல்வி நிலையத்தில் நடைபெற்ற போர்க்கால கருத்தரங்கில், பருத்தித்துறை வட்ட அமைப்பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாங்கள் நிமிர்ந்து நின்று மீன் பிடித்த கடலும், நிலத்திலே வேர்வை சொட்ட உழைத்த வயல்வெளிகளும் அவனுக்கு இரையாகப் போவதை நாங்கள் பார்த்திருக்க முடியாது.

எம் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் வருங்காலத் தூண்களை உருவாக்கித் தரும் பாடசாலைகள் எங்கனும் அவன் குடித்தாடுவதற்கு நாம் இடமளிக்க முடியும்" என்றார். ■

# அகதி முகாம்களில் அவலங்கள் பல !

# ஒரு வாரம் ஒரு வருடம் போலானது !!!

காலையும், இரவும் பாண் தருகிறார்கள். பகல் வேளைக்குச் சோறு தருகிறார்கள். ஆறு பேரைக் கொண்ட என் குடும்பத்திற்கு இந்த உணவு போதாது. வயது வந்த பிள்ளையும், கணவரும் நானும் அரை வயிற்றுக்குச் சாப்பிட்டுவிட்டு, சிறு பிள்ளைகளின் பசியைப் போக்குகின்றோம். சில வேளைகளில் நாம் சாப்பிடாமலேயே சிறு பிள்ளைகளின் பசியைப் போக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் இளவாலையைச் சேர்ந்த குடும்பப் பெண்ணான துரைசிங்கம் செல்லம்மா. இவர் மானிப்பாய் அந்தோனியார் தேவாலய அகதி முகாமில் தங்கியிருக்கிறார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நடந்த இராணுவத் தாக்குதல்களால் பாதிப்புற்று மானிப்பாய் பகுதியில் தங்கியுள்ள இவரைப் போன்ற மற்றும் பல அகதிகளாக்கப்பட்டவர்கள் இதே வகையான தமது கஸ்டங்களைத் தெரிவித்தனர்.

இதேபோல் அளவெட்டி, விளான், மாரீசன்கூடல், மாதகல் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் பலர் மானிப்பாய் பகுதியிலேயே தஞ்சம் புகுந்துள்ளனர்.

அங்குள்ள பல அகதி முகாம்களுக்கு நிலைமையை நேரில் கண்டறியச் சென்றபோதே திருமதி துரைசிங்கத்தின் நிலையை அறிய முடிந்தது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் மொத்தம் பதினேழு அகதி முகாம்கள் உள்ளன. அவை அநேகமாக மானிப்பாய் பகுதியிலேயே அமைந்துள்ளன.

உயிரையாவது காத்திடுவோம் என்ற எண்ணத்துடன் இடம்பெயர்ந்து இங்கு வந்து சேர்ந்த எமக்கு ஏற்பட்டுள்ள அவலத்தைக் கவனிப்பார் இல்லையா? - என்று அகதிகளாக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் கேட்கும் அளவுக்கு-

இராணுவத் தாக்குதல் நடந்து சில வாரங்களாகியும் இடம்பெயர்ந்தோர் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியதாகவே இருக்கின்றது.

மக்கள் இருப்பிட வசதி இன்றி மரநிழல்களில் கீழ் சேலைகளால் மறைப்புக் கட்டி மண்ணில் படுத்திருப்பது ஒருவகைச் சோகக் காட்சி.

மலசலகூட மற்றும் குடிதண்ணீர் வசதிகள் போதியளவு இல்லாமல் நோய்களைக் கேட்டு வாங்கிக் கொண்டிருக்கும் கூட்டத்தினராகவும் இடம்பெயர்ந்த மக்கள் மாறி விட்டனர். சூழ்நிலை இவர்களை இப்படி மாற்றி விட்டதே என்று கவலை அடைவதைவிட வேறு எதுவும் தோன்றவில்லை.

மாற்றுடையின்றி வந்ததால் குளிக்க முடியாமல் சுகாதாரக் கேட்டைத் தேடிக் கொள்ளும் நிலையும் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

சில முகாம்களில் வயல் வரம்புகளில் கூட மக்கள் இரவு நேரங்களில் படுத்து உறங்குகின்றனர்.

மானிப்பாய் பகுதி அகதிமுகாம்களுக்கு நேரில் சென்று பார்த்ததில் கண்ட, கேட்ட அவலங்கள் மிகப் பல.

இடம் பெயர்ந்தவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் உருவாக்கப்பட்ட முகாம்களிலேயே வாழ்கின்றார்கள்.

மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்தில் அமைந்துள்ள முகாமில் ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கியுள்ளன. அவர்களில் பலரிடமும் அவர்களது கஸ்டங்கள் பற்றிக் கேட்டறிந்தோம்.

## ஒரு கிழமை ஒரு வருடம்

"உயிரைக் காக்க வேண்டும் என்று இடம்பெயர்ந்து இங்கு வந்து சேர்ந்த எமக்கு ஏற்பட்டுள்ள அவலத்தைப் பாருங்கோ. ஒரு கிழமை ஒரு வருடமாகத் தெரிகிறது. இன்னும் எத்தனை காலத்துக்கு இப்படி நரக வாழ்க்கை வாழ்வது?" -என்று பெண்கள் பலரும் அழுதவாறு கேட்டார்கள்.

மரநிழல்களில் சேலைகளை மறைவிடமாக்கி, பாய்கூட இல்லாது, வெறும் மண்ணில் படுக்க வேண்டிய நிலை. மலசலகூட வசதியில்லை. ஒரு மைல், இரு மைல்கள் நடந்து பனங்கூடலையோ, வயல்கரைகளையோ விடிவதற்கு முன் நாடி காலைக் கடனைக் கழிக்க வேண்டிய [illegible]



தமிழ்நாட்டிலிருந்து திருப்பியனுப்பப்படும் அகதிகள் தமிழீழ மண்ணில் வந்திறங்குகையில்

[illegible]

அரைகுறைச் சாப்பாடு கிடைப்பதேனும் பெரும் உதவி. வேறு உணவுப் பொருட்களை வாங்குவதற்கு எங்களிடம் கையில் பணம் எதுவும் இல்லை. பலர் உடுத்த உடுப்புடன் வெறும் கையுடன் வந்திருக்கின்றோம். இப்படி எத்தனை நாட்களைப் போக்க முடியும் என்று அங்கலாய்த்தார் சின்னத்தம்பி சுப்பிரமணியம் என்ற 55 வயது நபர். இவர் தோட்ட வேலை செய்து அன்றாடம் உழைத்து வாழ்ந்தவர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி முகாம்களுக்குச் சென்ற போதும் முன் கண்டது போன்ற அவலங்களையே பலரிடமிருந்தும் திரும்பவும் கேட்க முடிந்தது.

சாப்பாடு தான் போதாதென்றால் நிம்மதியாய் படுக்கக் கூட இடமில்லையே என்று அங்கலாய்த்தார் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தங்கியுள்ள பெண் ஒருவர். அவரும் இளவாலையைச் சேர்ந்தவரே.

## கடும்புழுதியே படுக்கை

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் மொத்தம் [illegible]

[illegible]

போதிய விறகு இல்லாததால் சோறு அரைகுறை அவியல் பதத்திலேயே வடிக்கப்படுகின்றது. அவற்றைக் குழந்தைகளுக்குக் கொடுப்பதால் வயிற்றோட்டம் ஏற்படுகின்றது. குழந்தைகளுக்குப் பால்மா இல்லை. அதனால் அரைகுறை வெந்த சோற்றையே பிள்ளைகளுக்குக் கொடுக்கின்றோம் என்றார் மாதகலைச் சேர்ந்த பராசக்தி என்ற இளம் குடும்பப் பெண். இவர் மானிப்பாய் மகளிர் கல்லூரி முகாமில் தங்கியிருக்கின்றார்.

வெளியிடங்களில் படுக்க வேண்டியுள்ளதால் வாரி இறைக்கும் புழுதி மண்ணால் இருமல், நெஞ்சுநோ ஏற்படுவதாகக் கூறி வருத்தப்பட்டார் மாரீசன்கூடலைச் சேர்ந்த 70 வயதான ஒருவர்.

முகாம்களுக்குப் போதிய விளக்குகள் வழங்கப்படாததால், வெளித்தரைகளில் பாம்பு, பூச்சி பயத்துடன் நித்திரையின்றி காலத்தைக் கழிப்பதாக வயோதிபப் பெண் ஒருவர் தெரிவித்தார்.

[illegible] 42 குடும்பங்கள் தங்கியுள்ளன.

## வயல் வரம்பும் படுக்கையாகின்றது

[illegible]

பல இடங்களில் ஆலயங்களைச் சுற்றியுள்ள மரங்கள் அகதிகளுக்கு தஞ்சம் அளித்துள்ளன. மரங்களின் கீழ் சிறு சிறு இடங்களைத் தமக்கென வகுத்துத் துணிகளை சுற்றி வீடமைத்து மரங்களைக் கூரையாக்கி அகதிகள் வாழ்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களை நிர்வகிக்கும் தொண்டர் நிறுவனங்களால் [illegible] ஒரு கிலோ என்ற வீதத்தில் ஒரு வேளைக்கு அரிசியும் [illegible] முகாம்களுக்கு வழங்கப்படுகின்றன. ஒரு இறாத்தல் (750 கிராம்) பாண் மூன்று துண்டுகளாக வெட்டப்பட்டு ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது.

## பொது அமைப்புக்கள் உதவுகின்றன

[illegible]



செஞ்சிலுவைச் சங்கமும் நிவாரணப்பணிகளில் ஈடுபாடு

# இது எங்கள் தேசம்

உதிரம் கொடுத்து
உறவை வளர்த்தோம் - எம்
உயிரைக் கொடுத்து
எல்லைகள் மீட்டோம்.
இது
எங்கள் தேசம்.

வெங்களமாடி
விழுப்புண் ஏற்று - எம்
தேசம் காத்தோம்.
குருதியாற்றில் அமிழ்த்தினாலும்
உறுதி குலையோம்.
இது எங்கள் தேசம்.

வல்லரசெம்மை வருத்தினாலும்
பல்லிளித்து - நாம்
பதறமாட்டோம்.
எல்லைகள் தாண்டிடின்
பாடம் உரைப்போம்.
இது
எங்கள் தேசம்.

எங்கள்
வாழ்வை அமைக்கவும்,
வழியைத் தேடவும்
எமக்கே
உண்டு உரிமை.
இது
எங்கள் தேசம்.

விழிப்புடன் இருப்போம்.
துடிப்புடன் நிமிர்வோம்.
எம்
சந்ததி காக்க
சரித்திரமாவோம்.
இது
எங்கள் தேசம்.

**- ஜெயா -**









இது ஒரு மக்கள் யுத்தம். ஆகவே, ஒரு சில கெரில்லாப் போராளிகள் இறந்து போவதால் விடுதலைப் போராட்டம் ஒரு முடிவுக்கு வருவதில்லை. மக்களின் உறுதிப்பாடு, சர்வதேச ஆதரவு மற்றும் சூழ்நிலைகள் தான் ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு வழிவகுக்கின்றன. எமது வாழ்நாளிலேயே தமிழீழத்தை அடையலாம் என்ற நம்பிக்கையில் நாம் போராடுகின்றோம். எமது விடுதலைப் போராட்டத்தின் பழுவை அடுத்த பரம்பரை மீது சுமத்த நாம் விரும்பவில்லை.

**தேசியத் தலைவர் வே. பிரபாகரன்.**


| | | | | |
|---|---|---|---|---|
| TAMIL CO-ORDINATING COMMITTEE<br>P.O.BOX 694, MULGRAVE NORTH<br>VICTORIA 3170, AUSTRALIA.<br>Tel: 03-457 6347 Fax: 03-561 8224 | LIBERATION TIGERS OF TAMIL EELAM<br>P.O.BOX 47, 7600 STRUER<br>DENMARK<br>Tel / Fax: 97-841231 | TAMIL CO-ORDINATING COMMITTEE<br>341 Rue des Pyrenees<br>75020 paris, france<br>Tel: 435 81142 Fax: 435 81191 | TAMIL CONFEDERATION GERMANY<br>P.O.BOX 340251<br>5270 GUMMERSBACH 34<br>GERMANY | TAMIL CO-ORDINATING COMMITTEE<br>Via Mariano Stabile - 34<br>90139 PALERMO, ITALY.<br>Tel / Fax: 091-611 3179 |
| TAMIL CO-ORDINATING COMMITTEE<br>Groot Hertoginnelaan 106<br>2517 BL Den Haag, NEDERLAND<br>Tel:070-346 1963 Fax:070-346 1970 | TAMIL CO-ORDINATING COMMITTEE<br>P.O.Box 1699 Vika<br>0110 OSLO - 1, NORWAY.<br>Tel: 02-191260 Fax: 02-190114 | TAMIL CO-ORDINATING COMMITTEE<br>HOFJECKLIN, 7415 RODELS<br>SWITZERLAND<br>Tel: 077-816609 | UNITED TAMILS ORGANISATION<br>54 TAVISTOCK PLACE<br>LONDON WC1H 9RG, U.K.<br>Tel: 071-837 7162 Fax: 071-278 5666 | |



Printed by Observer Group Newspapers, Upton Court, Slough, Berks. Tel: (0753) 523366